**நாள். 17.04.2025**

**<u>CC No. 11/2025</u>**

**திரு. ரமேஷ்**

த/பெ. செல்வப்பன்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>ம.சா.4 சாட்சி சத்தியபிரமாண வாக்குமூலம்</u>**

1. நான் பென்னாகரம் எர்ரப்பட்டி கதவிலக்கம் 19/1 என்ற முகவரியில் குடியிருந்து டிரைவராக தொழில் செய்து வருகிறேன். 04.04.2024 ம் தேதி காலை 7 – 7.30 மணியளவில் நான் எனது Duty க்கு கிளம்பி கொண்டிருந்தபோது எனது வீட்டிற்கு பின்பக்கத்தில் அய்யோ அய்யோ என்று கத்தினார்கள். நான் கிளம்பும் போது திடீரென்று சத்தம் கேட்டதால் நான் லாரியை நிறுத்திவிட்டு இறங்கி சென்று பார்த்தேன். அப்போது பரமேஷ்வரன், மகாதேவன் ஆகியோர் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு புறன்டார்கள். அவர்களை நான் விளக்கிவிட்டேன். அப்போது மகாதேவனுக்கு கால் முட்டிக்கு கீழ் காயமும், பரமேஷ்வரனுக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. பரமேஷ்வரனுக்கு எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்பதை நான் கவனிக்கவில்லை. இருவரையும் மருத்துவமனைக்கு போக சொல்லிவிட்டு நான் லாரியை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டேன். மேற்படி பரமேஷ்வரனும், மகாதேவன் இருவரும் பக்கத்து காட்டுக்காரர்கள். இருவருக்கும் இடையே சொத்து பிரச்சனை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்த நிலையில் சம்பவத்தன்று இருவரும் அடித்துக்கொண்டதை நான் பார்த்தேன்.

**நாள். 17.04.2025**

**<u>CC No. 11/2025</u>**

**திருமதி. சுதா**

த/பெ. ரமேஷ்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>ம.சா.5 சாட்சி சத்தியபிரமாண வாக்குமூலம்</u>**

1. நான் பென்னாகரம் எர்ரப்பட்டி கதவிலக்கம் 9/19 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜரில் உள்ள மனுதாரர் பரமேஷ்வரன். ஆஜரில் உள்ள எதிர்மனுதாரர்களின் பெயர் மகாதேவன், கொளந்தை, முனிநாதன், மணி ஆவார்கள். 04.04.2024 ம் தேதி காலை 7.15 மணியளவில் எனது கணவர் வெளியூறுக்கு செல்ல இருந்ததால் அவரை அனுப்பி வைத்துவிட்டு வீட்டில் இருந்தேன். அப்போது என் வீட்டிற்கு பின் பக்கத்தில் சத்தம் கேட்டு நான் போய் பார்த்தபோது மகாதேவன், பரமேஷ்வரன் இருவரும் அடிப்பட்டு கீழே கிடந்தார்கள். நான் எனது கணவர் பின்னடியே வேகமாக போய் பார்த்தபோது எனது கணவர் இருவருக்கும் இடையிலான சண்டையை விலக்கி விட்டதாக சொன்னார்.